## கம்பம் நகராட்சி

**2019–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் (30.08.2019) ஆம் நாள் வெள்ளி கிழமை பிற்பகல் 4.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## கூட்டப் பொருட்கள்

| | |
|---|---|
| **1.** | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொறுப்பு) அவர்களின் 8/2019–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | இந்நகராட்சி பொது பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள நகல் பெருக்கி ஜெராக்ஸ் இயந்திரங்கள் அடிக்கடி பழுது ஏற்பட்டுவதால், அலுவலக பணி நிமித்தமாக ஜெராக்ஸ் எடுப்பதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. மேலும், RICOH இயந்திர நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான திருப்பதி ஆபிஸ் புராடக்ட்ஸ், மதுரை நிறுவனம் மூலம் பழுதுகள் சரிசெய்து தர கோரப்பட்டு தற்காலிகமாக ஜெராக்ஸ் இயந்திரங்கள் சரிசெய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது மீண்டும் தொடர்ந்து பழுதுகள் ஏற்பட்டுள்ளது. இதனால் பணிகள் தொய்வு ஏற்படும் நிலை உள்ளது. மேலும், திருப்பதி ஆபீஸ் புராடக்ஸ், மதுரை நிறுவனம் மூலம் பழுதுகள் சரிசெய்ய கோரியதில், மேற்கண்ட ஜெராக்ஸ் இயந்திரம் சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பாக கொள்முதல் செய்யப்பட்டு, பலமுறை உதிரி பாகங்கள் மாற்றப்பட்டுள்ளது எனவும், தொடர்ந்து பழுதுகள் சரிசெய்யும் பட்சத்தில் கூடுதல் செலவினங்கள் ஏற்படும் நிலை உள்ளதாகவும், இவற்றினை கழிவு செய்து, புதிதாக நவீன முறையில் பயன்பாட்டில் உள்ள ஜெராக்ஸ் இயந்திரத்தினை கொள்முதல் செய்து பயன்படுத்தலாம் என தெரிவித்துள்ளது.<br>எனவே, கூடுதல் செலவினங்களை தவிர்க்கும் பொருட்டும், நிர்வாக நலன் கருதியும் இந்நகராட்சி பொது பிரிவிற்கு ஒரு நவீன ஜெராக்ஸ் இயந்திரமும், பொறியியல் பிரிவிற்கு ஒருநவீன ஜெராக்ஸ் இயந்திரமும் வாங்கிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 4.00 இலட்சத்திற்கும், செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், பழைய ஜெராக்ஸ் இயந்திரத்தினை ஒப்பந்தப்புள்ளி பெறும் நிறுவனத்திடமே ஒப்படைத்து காசாக்கி கொள்வதற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** 1)மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1687/2015/இ1) |
| **3.** | இந்நகராட்சி பகுதி வார்டு **30** ஆங்கூர்பாளையம் நுண் உரம் செயலாக்க மையம் (MCC) உள்ள **14** தொட்டிகளிலும் ரீப்பர் மூலம், நைலான் வலை செய்து மூடி வைத்து ஈக்கள் தொந்தரவை கட்டுப்படுத்துவதற்கு, நைலான் வலை அமைப்பதற்கு **14.08.2019–ஆம்** நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகள் பின்வருமாறு, |

| வ. எண் | ஒப்பந்தாரரின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் (ஒரு தொட்டிக்கு நைலான் வலை) ரூ. | |
|---|---|---|---|
| 1 | Prabu Enterprises, Cumbum | <u>Raw material Purchase</u><br>Nelton, Velcrew, Reper, Stitching, Machine charge (Cutter & Drilling)<br>Labour Charge | 4100/-<br>350/- |
| | | | 4450/- |
| 2 | Haraan Mosquito net Service, C. Puduppatti. | <u>Raw material Purchase</u><br>Mosquito net, Velcrew, Reper, Stitching charge stabler Pin Nail Charge<br>Labour charge 2 person | 3600/-<br>360/- |
| | | | 3960/- |

**அலுவலகக்குறிப்பு..** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s, Haraan Mosquito net Service, C. Puduppatti. விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 2383/2019/எச்1)**

**4.** இந்நகராட்சி ஈப்பு எண். T.N. 60 Q 2112 வாகனத்திலும், ஈப்பு எண். T.N. 60 X 0499 வாகனத்திலும் உள்ள மின் கலன் பழுதாகி வாகனத்தினை இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே, புதிய மின்கலன் மாற்றி அமைத்திடவும், ஈப்பு எண். T.N. 60 Q 2112 வாகனத்தில் முன்பக்க முகப்பு விளக்கு இரண்டு எண்ணம் புதிதாக மாற்றிட உத்தேச செலவினம் ரூ. 17,000/–க்கு (ரூபாய் பதினேழாயிரம் மட்டும்) உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | பழைய பேட்டரியினை திரும்ப பெற்றுக்கொண்டு புதிய பேட்டரி வழங்க விலை பட்டியல் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 1)பெரியார் பேட்டரி சென்டர்,<br>444–எ2, குமுளி ரோடு, கம்பம் | ரூ. 16,500/– |
| | 2)விநாயகா பேட்டரிஸ்,<br>எல்.எப். ரோடு, கம்பம் | ரூ. 16,600/– |
| | 3) எக்சைடு பேட்டரி கார்னர்,<br>432, எல்.எப். ரோடு, கம்பம். | ரூ. 16,832/– |

**அலுவலகக்குறிப்பு..** 1) உத்தேச செலவினத்திற்கும் மற்றும் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள பெரியார் பேட்டரி சென்டர், 444–ஏ2, கம்பம் என்பவரது விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 336/2018/இ1)

**5.** இந்நகராட்சியின் 2019–2020 ஆம் ஆண்டிற்கு எழுதுப் பொருள்கள் மற்றும் படிவங்கள் கொள்முதல் செய்வதற்கு உத்தேச செலவினமாக ரூ. 5 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண் . 1744. நாள் 31.05.2019 மூலம் அனுமதி பெறப்பட்டு திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் நிறுவனம் மூலம் பொருள்கள் கொள்முதல் செய்யப்பட்டது. நகர்மன்றம் அனுமதித்த தொகையை விட கூடுதல் செலவினம் ரூ . 32,000/ அதிகமாக ஏற்பட்டுள்ளதால் எதிர்வரும் காலங்களில் அலுவலகத்திற்கு தேவையான எழுது பொருள்கள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.. 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசு அங்கீகாரம் பெற்று நிறுவனமான திருச்சி மல்டிபர்பஸ் இண்டிகோ நிறுவனத்தில் கொள்முதல் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**6.** கம்பம் நகராட்சியில் குத்தகை மற்றும் இதர பணிகளுக்காக பிடித்தம் செய்யப்படும் சேவை வரியினை உரிய அரசு தலைப்பில் செலுத்துவதற்கு இந்நகராட்சிக்கென GST பதிவு எண் பெற்றதற்கும், ஒப்பந்ததாரர்களிடமிருந்து TDS முறையில் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை கட்டண வரி (GST) செலுத்துவதற்கென பதிவு எண் பெற்றதற்கும், மேற்சொன்ன இரு இனங்களுக்காக வசூலிக்கப்படும் தொகையினை உரிய அரசு தலைப்பில் Online முறையில் செலுத்தி Return File செய்வதற்கும் ஆகும் நிர்வாக உத்தேச செலவினம் ரூ. 50,000./ ற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) வசூலிக்கப்பட்ட சேவை வரி மற்றும் சரக்கு மற்றும் சேவை கட்டண வரியினை மார்ச் 2019 முதல் ஜூலை 2019 வரையிலான காலங்களுக்கு Online முறையில் இருசால் செய்ய உரிய ஆவணங்கள் தயாரித்தமைக்கும், மற்றும் Return File செய்தமைக்கும் ரூ. 5000/ திரு.பி. விருமாண்டி, வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேலும் 2019/2020 ஆம் நிதியாண்டில் ஆகஸ்ட் முதல் மார்ச் வரை மேற்கண்ட இனங்களுக்காக செலவினம் மேற்கொள்ளப்படுவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3330 /2017/பி2)

| | |
|---|---|
| **7.** | கம்பம் நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், நகராட்சி மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியர்கள், நகர சுகாதார செவிலியர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2019–2020 ஆம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு காலணிகள் மற்றும் தலைப்பாகை துணி ஆகியவை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாங்கி வழங்குவதற்கும் , தையல் கூலி வழங்குவதற்கும் ஆகம் உத்தேச செலவுத் தொகை ரூ. 5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம். |

**ஒப்பம்/– திருமதி. இ. செல்வராணி,**
**ஆணையாளர்(பொ) மற்றும் தனி.அதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 30.08. 2019**
**இடம். கம்பம்**